அழைத்துப் பேசி இது சம்பந்தமாக விரைவிலே முடிவு எடுத்து, நீதிமன்றத்திலே அந்த வழக்குகளைத் தீர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்து விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) கவன ஈர்ப்புக்கு இதுவரை வந்த பதில்கள் அவையில் வைக்கப்பட்டுள்ளது குறித்தும் இனிவரும் பதில்கள் தபால் மூலம் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுவது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு 2 கவன ஈர்ப்பு எடுக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் பேரவையில் 79 கவன ஈர்ப்புகளுக்கான பதில்கள் வைக்கப் பட்டு இருப்பதை உறுப்பினர்கள் பார்க்கலாம். அவை தவிர, ஏனைய உறுப்பினர்களுக்குப் பதில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இந்த அளவுக்கு நாள்தோறும் 2 வீதம் எடுத்து கடைசியில் 79 கவன ஈர்ப்புகளுக்குப் பதிலுரை வைத்தது என்பது நம்முடைய சட்டமன்ற வரலாற்றிலேயே இதுதான் முதல் முறையாக இருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கை களை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். டாக்டர் மணிமேகலை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பில்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக குழுவின் 147 மற்றும் 148 ஆகிய இரண்டு அறிக்கைகளை பேரவைக்கு அளிக் கிறேன்.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக்குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழு

1994 மே 5] பிற்பகல் 1.15

திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை 1993–94ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினொன்றாவது, பன்னிரெண்டாவது மற்றும் பதின்மூன்றாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஆ) சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1994 (ஆ, இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 17/1994) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1994

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 17/1994) மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு @(சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 17/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

இதைப்பற்றி விளக்கங்கள் கூறவேண்டிய தேவையில்லை என்றே கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் முழுவதுமே எதிர்த்தாலும் கூட கவலைப்பட மாட்டேன் என்பதைச் சொல்லி (சிரிப்பு) இதனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் எனக் கோருகிறேன்.

@ 2-5-1994-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.